**சுடர்ஒளி வாசகர்களுக்கு...**

சுடர்ஒளி மாலைத் தினசரி புதிய பரிணாமத்தோடு பல்சுவை அம்சங்களோடு மேலும் மெருகூட்டப்பட்ட வடிவில் உங்கள் கரங்களில் தவள இருக்கின்றது. அதற்குரிய பூர்வாங்கப் பணிகளை மேற்கொள்ளவேண்டி உள்ளதால் தற்காலிகமாக சில தினங்கள் உங்கள் அபிமான சுடர்ஒளி இன்று முதல் வெளிவராது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆசிரியர்

Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

15.01.2021 வெள்ளிக்கிழமை



# நினைவுத்தூபிக்கான அத்திபாரம் வெட்டப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 15
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடித்தழிக்கப்பட்ட இடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கான அத்திபாரம் அமைக்கும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல்க

2

## தப்பித்து ஓடிய தொற்றாளர் மன்னாரில் மடக்கிப் பிடிப்பு

மன்னார், ஜன. 15
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கொரோனா உறுதி செய்யப்பட்டவர், அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில் பாதுகாப்பு தரப்பினரால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார். மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில்

2

## வவுனியாவில் மேலும் 16 பேருக்கு தொற்று

வவுனியா, ஜன. 15
வவுனியா நகரப் பகுதிகளைச் சேர்ந்த 16 பேருக்கு கொரோனா தொற்று இன்றையதினம் உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியா நகர வியாபார

2

## எம்.பிக்கள் எவருக்கும் தொற்று இல்லையாம்!

கொழும்பு, ஜன.15
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது. இதன்படி 15 உறுப்பினர்களின் பரிசோதனை முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்க

2

## இலங்கையில் மனித உரிமை நிலைமை தற்போது மோசம்

***மனித உரிமைகள் கண்காணிப்பகம் கவலை***

கொழும்பு, ஜன. 15
இலங்கையில் சிறுபான்மைச் சமூகம் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாக, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின்

2

# இலங்கைக்கு பொறுப்புக்கூறலுக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள் வலியுறுத்து

**கிளிநொச்சி, ஜனவரி 15**

**எந்தவொரு புதிய தீர்மானங்களும், பொறுப்புக்கூரலை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கு கால அவகாசத்தை வழுங்கக் கூடாது. அந்தத் தீர்மானமானது இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அல்லது விசேடமாக நிறுவப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் முன்கொண்டு சென்று நிறுத்த உதவ வேண்டும் என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

2

## சாந்தபுரம் கிராமம் முல்லைத்தீவுக்கா? கிளிநொச்சிக்கா?

கிளிநொச்சி, ஜன. 15
நில அளவைகளின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தினுள்ளும், நிர்வாக நடவடிக்கைகளில் கிளிநொச்சி மாவட்டத்தினுள்ளும் சாந்தபுரம் கிராமம் உள்ளடங்குவதால் எதிர்காலத்தில் பிரச்சினைகள் எழலாம். எதிர்காலத்

2

## கட்டுநாயக்காவின் பாதுகாப்பு இறுக்கப்படும் பாதுகாப்பு

கொழும்பு, ஜன. 15
கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்காக

2

## நல்லூர் பிரதேச சபை பட்ஜெட் கூட்டமைப்பு, முன்னணிக்குள் பிளவு

*பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றம்*

யாழ்ப்பாணம், ஜன. 15
நல்லூர் பிரதேச சபையின் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 13 உறுப்பினர்களும், எதிராக 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இதனால் 11 மேலதிக வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது. வரவு செலவுத் திட்டம் தவிசாளர் ப.மயூரனால் இன்றைய தினம் சபையில் முன்வைக்கப்பட்டது. 20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில், வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 13 உறுப்பினர்களும், எதிராக இரண்டு உறுப்பினர்களும் வாக்களிக்க, மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். அத்தோடு முன்னாள் தவிசாளர் உட்பட இரண்டு உறுப்பினர்கள் அமர்பில் கலந்துகொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிக

2

## கச்சதீவு ஒப்பந்தை மீறும் இலங்கையை கண்டித்து கறுப்புக்கொடி போராட்டம்

**இராமேஸ்வரம் மீனவர்கள் சபதம்**

இராமேஸ்வரம், ஜன. 15
தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு, அரசுடமையாக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்திலும், கச்சத்தீவு ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறுவதை கண்டித்தும் இராமேஸ்வரம் மீனவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி தமது மீன்பிடி படகுகளில் கறுப்புக்

2

# நினைவுத்தூபிக்கான...

லைக்கழக மாணவர்கள் இதனை முன்னெடுத்துள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்கால் நினைவுத்தூபி கடந்த 8ஆம் திகதி இரவு பல்கலைக்கழக நிர்வாகத்தால் இடித்து அழிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து தொடர் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். சில மாணவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

மாணவர்களின் போராட்டத்துக்கு பல இடங்களிலிருந்தும் ஆதரவு பெருகியதால் தூபி இடித்து அழிக்கப்பட்ட அதே இடத்தில் மீண்டும் தூபி அமைப்பதற்கு மாணவர்களின் பங்குபற்றலோடு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசாவால் கடந்த 11ஆம் திகதி அடிக்கல் நடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இன்று அத்திபாரம் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ,20)

# இலங்கைக்கு....

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் இணை தலைமை நாடுகளுக்கும் அனுப்பிய கடிதத்தில் அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பும் கிளிநொச்சியில் இன்று இடம்பெற்றது. சங்கத் தலைவி கலாரஞ்சினி இது தொடர்பில் தெரிவித்ததாவது:

எந்தவொரு புதிய தீர்மானங்களும், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கக் கூடாது. அந்தத் தீர்மானமானது இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அல்லது விசேடமாக நிறுவப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் கொண்டு சென்று நிறுத்த உதவ வேண்டும். இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதானது அதனை தண்டனையிலிருந்து தப்பிக்க வழிசெய்வதுடன், இலங்கை அரசின் கொடுமையான சட்டங்களாலும் தமிழர் தாயக பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவ பிரசன்னத்தாலும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் இது வழிசமைக்கும்.

இலங்கையில் நீண்ட காலமாக புரையோடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்காக சர்வதேசத்தால் ஒழுங்கமைக்கப்படுவதும், கண்காணிக்கப்படுவதுமான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் மீளவும் நடைபெறாதிருக்க உறுதிப்படுத்த வேண்டும்.

நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றில்லாமையால் தமிழ் மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் 50 ஆண்டுகளுக்கு மேலாக 1958, 1977, 1983, 2009ஆம் ஆண்டுகளில் திரும்ப திரும்ப மேற்கொள்ளப்படுவதற்கு முக்கிய பங்களிப்பு செய்துள்ளது.

போரில் கணவர்களை இழந்த 90 ஆயிரம் தமிழ் பெண்களின் நிலை தொடர்பாக, குழந்தைகள் உள்பட காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிதல் தொடர்பான நிலைப்பாடுகள், தமிழ் அரசியல் கைதிகளின் நிலை தொடர்பாக, பல்வேறு வகையான நில அபகரிப்பு, இராணுவ பிரசன்னம் மற்றும் சர்வதேச குற்றங்கள் தொடர்பான பொறுப்புக் கூறுதல் சம்பந்தமான நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்திலிருந்து ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒரு முறை பெற்றுக்கொள்ளவேண்டும், என்று தெரிவித்துள்ளார். (ஒ,6)

# எம்.பிக்கள்....

ளில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# வவுனியாவில்...

நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. ஒரு பகுதி முடிவுகள் இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா நகர வியாபார நிலையங்களில் பணிபுரியும் 16 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களுடன் சேர்த்து, வவுனியா நகர் பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 170 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா நகரப்பகுதிகளைச் சேர்ந்த மேலும் 500 பேரின் பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் நகரின் முடக்கம் தளர்த்தப்படலாம் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார். (ஒ,110)

# தப்பித்து ஓடிய...

சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் கொரோனாத் தொற்றாளருக்கு உதவியாக அவரது மகன் விடுதியில் தங்கியிருந்துள்ளார்.

மகனுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனை அறிந்த மகன், நேற்று வியாழக்கிழமை மதியம், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

துரித நடவடிக்கைகளை மருத்துவமனை நிர்வாகம் மேற்கொண்டது. பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடன் மன்னார் எழுத்தூர் பகுதியில் வைத்து நேற்று மாலை அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரை சிகிச்சைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ,இ)

# முல்லைத்தீவுக்கா?....

தில் எல்லை மீள் நிர்ணய குழுவுடன் ஆராய்ந்து, சாந்தபுரம் கிராமத்தை கிளி நொச்சி மாவட்டத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளால் சாந்தபுரம் கிராமத்தின் பல பகுதிகள் கடந்த வாரத்தில் ஒளிப்படம் எடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பணியாளர்கள் காணி ஆவணங்களை வழங்குவதற்காக சாந்தபுரம் கிராமத்தின் பொது நோக்கு மண்டபத்துக்கு இன்று வருகை தந்துள்ளனர். மக்களையும் அழைத்துள்ளனர். மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

'இன்று வரை அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் கரைச்சிப் பிரதேச செயலகத்தையும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தையுமே அணுகி வருகின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குள் எமது கிராமத்தை உள்ளடக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று மக்கள் தெரிவித்தனர்.

'நில அளவை வரைபடத்தின்படி சாந்தபுரம் கிராமம் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் வருகின்றது. மக்கள் நிர்வாக நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்டத்துடன் பேணி வருகின்றார்கள். காணி ஆவணங்களை மாத்திரமே நாம் வழங்குகின்றோம். ஏனைய நடவடிக்கைகள் வழமைபோன்று கிளிநொச்சி மாவட்டத்துடனேயே இருக்கும்' என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

'சாந்தபுரம் கிராமம் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்குள் வருகின்றமையால் காணி ஆவணங்களை மாத்திரமே முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய நடவடிக்கைள் தொடர்ந்தும் கிளிநொச்சி மாவட்டத்துடன் இருக்கும். ஆனாலும் இது நிர்வாக நடவடிக்கைகளில் குழப்பத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். எதிர்காலத்தில் எல்லை மீள் நிர்ணய குழுவுடன் பேசி முழுமையாக சாந்தபுரத்தை கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ஒ,6,214)

# இலங்கையை...

கொடி ஏற்றி கச்சத்தீவு நோக்கிச் சென்று போராட்டம் நடத்தவுள்ளதாக இராமேஸ்வரம் மீனவ சங்கம் அறிவித்துள்ளது.

'இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட பல இலட்ச ரூபா பெறுமதியான படகுகளை உடனடியாக விடுவிக்கக் கோரியும், 1976ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தின்படி கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தியும் அதையும் மீறி அந்தப் பகுதிகளில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்வதை கண்டித்தும் பாரம்பாரிய இடத்தில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமையை மீட்டுத்தர வலியுறுத்தியும் எதிர்வரும் 23ஆம் திகதி இராமேஸ்வரத்தில் உள்ள படகுகள் அனைத்திலும் கறுப்புக் கொடிகளை கட்டி கச்சத்தீவு நோக்கி பயணித்து போராட்டம் நடத்தவுள்ளோம்' என்று இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஒ,இ)

# இலங்கையில்....

தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. நாட்டின் சிறுபான்மை சமூகத்தினர் பாகுபாட்டையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர். சிறுபான்மை சமூகத்தினரே கொரோனாவை திட்டமிட்டு பரப்பி வருகின்றனர்நீனசுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசு துஷ்பிரயோ கங்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்பதுடன், பொறுப்புக்கூறல், சாட்சிகளை பாதுகாத்தல் தொடர்பில் பிரேரணையொன்றை கொண்டு வரவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ,இ)

# கட்டுநாயக்காவின்...

பயிற்றுவிக்கப்பட்ட 20 மோப்ப நாய்கள் இன்று வெள்ளிக்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன. பயணப் பொதிகள் எனத் தெரிவித்து பயணிகளால் இரகசியமான முறையில் கொண்டு செல்லப்படக் கூடிய வெடிபொருள்கள் மற்றும் போதைப்பொருள்கள் என்பவற்றை இனங்காண்பதற்காக இந்த நாய்களுக்கு அஸ்கிரியவிலுள்ள இலங்கை பொலிஸ் பயிற்சி பாடசாலையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 22 மில்லியன் ரூபா நிதியை இலங்கை விமான சேவை அதிகாரசபை வழங்கியுள்ளது. (ஒ,இ)

# நல்லூர்...

ளான இலங்கை தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகிக்க, ரெலோவைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்க, இரண்டு உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் மூலம் சபையின் வரவு செலவுத் திட்டம் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்த நல்லூர் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் முன்னாள் தவிசாளர் த.தியாகமூர்த்தியால் இரண்டு தடவைகள் சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியடைந்த நிலையில் அவர் தனது பதவியை இழந்திருந்தார்.

இதனால் சபையின் புதிய தவிசாளரை தெரிவு செய்யும் கூட்டம் கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற போது புதிய தவிசாளராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ப.மயூரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்பட்ட மதுசுதனை தோற்கடித்து தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ,20)

# ஐ.தே.கவின் பதவிகளில் அதிரடி மாற்றங்கள்

## அமைப்பாளர் பதவி தொடர்பில் விரைவில் முடிவு என்கிறார் நவீன்

கொழும்பு, ஜன.15

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துள்ள, அக்கட்சியின் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க, இது தொடர்பில் இன்னும் 10 நாள்களில் பதிலளிப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், பதவிநிலைகளில் அதிரடியான மாற்றங்கள் செய்யப்பட்டன. அதில், புதியவர்கள் பலர் உள்ளீர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பழையவர்கள் சிலர் ஓரங்கட்டப்பட்டு உள்ளனர். இந்நிலையிலேயே, நவீன் திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில், பதில் பொதுச் செயலாளராகப் பதவி வகித்திருந்த ஷமல் சேனாரத்ன, கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க, டி.எம். சுவாமிநாதன் ஆகியோர், கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# நீர்வழங்கல் அமைச்சின் செயலாளருக்கு தொற்று!

கொழும்பு, ஜன.15

நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் பிரியத் பந்து விக்கிரமவுக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீர்வழங்கல் அமைச்சராக பதவி வகித்துவரும் வாசுதேவ நாணயக்காரவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவரது செயலாளரான பிரியத் பந்துவிக்கிரமவும் தனிமைப்படுத்தப்பட்டார். பின்னர் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ற-இ)

# மாஸ்க் அணியாத 9 ஆயிரம் பேருக்கு வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜன.15

முகக்கவசம் அணியாத குற்றச்சாட்டின் கீழ், 9 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், மேல் மாகாணத்தில் நேற்று முகக்கவசம் அணியாத குற்றச்சாட்டில் கைதான நபர் ஒருவர் கொவிட் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். அத்துடன், தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைக் கடைப்பிடிக்காத 473 நிறுவனங்களுக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# மாஸ்க் அணியாத 24 பேர் கைது

கொழும்பு, ஜன.15

முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை 2 ஆயிரத்து 514 பேர் இந்தக் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (வ-இ)

# வைரஸ் கட்டுப்படுத்தலுக்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள்

கொழும்பு, ஜன.15

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும் வைரஸின் பாதிப்புகளைக் கண்டறியவும் நாட்டின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என, பொதுச் சுகாதார சேவைகளின் துணைப் பணிப்பாளர் ஜெனரல் டொக்டர் ஹேமாந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும், சில நாடுகளில், நிபா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது என செய்திகள் கிடைத்துள்ளன. இந்நிலையில் நாட்டில் நிபா வைரஸ் உள்ளிட்ட பிராந்தியத்தில் பரவும் பிற வைரஸ்கள் தொடர்பிலும் சுகாதார அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். இந்த வைரஸ் தொடர்பான தகவல்களை, உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# வீதி விபத்துகளால் ஒரே நாளில் 13பேர் சாவு

கொழும்பு, ஜன.15

வீதி விபத்துகள் காரணமாக நேற்று மாத்திரம் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். அவற்றில் 7 மரணங்கள் நேற்று இடம்பெற்ற விபத்துகளில் நேர்ந்துள்ளதுடன், ஏனைய 6 பேர் இதற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, வேடிக்கைக்காக அதிக வேகத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 18 முதல் 25 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் 12 பேர் பிலியந்தலை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# 693 இலங்கையர் தாயகம் திரும்பினர்

கொழும்பு, ஜன.15

கொரோனாத் தொற்றால் நாடு திரும்ப முடியாத நிலையில் இருந்த இலங்கையர்கள் 693 பேர் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். அவர்களில் 290 பேர் ஓமானிலிருந்தும் இஸ்ரேலில் இருந்து 119 பேரும் தென் கொரியாவில் இருந்து 95 பேரும் இவ்வாறு திரும்பியுள்ளனர். ஏனையோர் டுபாய், கட்டார், நெதர்லாந்து, மாலைத்தீவு, துருக்கி மற்றும் பாகிஸ்தானில் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளனர். (வ-இ)

# போதைப்பொருளுடன் கைதானார் பஸ் சாரதி

கொழும்பு, ஜன.15

காலி கொழும்பு வீதியில் சேவையில் ஈடுபட்டு வந்த அதிசொகுசு பஸ் ஒன்றின் சாரதி (வயது-27) ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். கைதான சாரதியிடமிருந்து 18 கிலோ ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கொஸ்கொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.இந்த சாரதி பஸ்ஸை பல்வேறு இடங்களில் நிறுத்தி போதைப்பொருள் விநியோகித்து வந்துள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# காத்தான்குடிக்கு தனிமை நீடிப்பு

மட்டக்களப்பு, ஜன.15

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கான தனிமைப்படுத்தல் சட்டம், எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.லதாகரன் அறிவித்துள்ளார். டிசம்பர் 31ஆம் திகதி அமுலுக்கு வந்த காத்தான்குடி பிரதேச தனிமைப்படுத்தல் சட்டம், நாளை 15ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்தது. எனினும், எதிர்வரும் 18ஆம் திகதியே இந்த தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கம் தொடர்பாக முடிவு செய்யப்படும். இந்தப் பிரதேசத்தில் தினமும் 100 முதல் 150 பேருக்கு அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் நடைபெறுகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# திரைப்படத்துறைக்கு மீண்டும் வரிச் சலுகை

கொழும்பு, ஜன.15

நல்லாட்சி அரசாங்கத்தால் ரத்து செய்யப்பட்ட உள்ளூர் திரைப்படத்துறைக்கான வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. திரைத்துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் பிரதமரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய திரைப்பட தயாரிப்பு மற்றும் திரைப்பட காட்சிப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது இறை வரி சலுகை வழங்கப்படவுள்ளது. அத்துடன் ஒரு திரைப்படத்தின் தயாரிப்புக்காக செலவிடப்பட்ட பணத்துக்காக வரி விலக்கு மற்றும் திரைப்படத்தை திரையிடுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்துக்கு வரி நிவாரணம் என்பன வழங்குதல் தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த வரி நிவாரணம் திரைப்பட கூட்டுத்தாபனத்தின் ஒப்புதலுக்கமைய செயற்படுத்தப்படும். உள்ளூர் திரைப்பட துறையுடன் தொடர்புடைய வல்லுநர்கள் திரைப்பட கூட்டுத்தாபனத்தின் ஊடாக கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் இந்த வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும் என பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (வ-இ)

ஜனாஸா விவகாரம்:

# தீர்மானிக்கும் பொறுப்பு நிபுணர் குழுவிடமே!!

## அரசியல்வாதிகளைத் தலையிட வேண்டாம் என்கிறார் பியல் நிஷாந்த

கொழும்பு, ஜன.15

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை, அடக்கம் செய்வதா, தகனம் செய்வதா என்ற விடயத்திலிருந்து அரசியல்வாதிகளை ஒதுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிங்கங்களாக வேடமிட்டிருக்கும் அரசியல் நரிகளால், மக்களைக் குழப்பமுடியாது. அசாத்சாலி, சிங்கம் போன்று வேடமிட்டிருக்கும் நரி. தீர்மானிக்கும் பொறுப்பை, சுகாதார பிரிவின் நிபுணர்களிடம் ஒப்படைக்க வேண்டும். சுகாதாரப் பிரிவினரின் தீர்மானத்தை நாட்டுப் பிரஜைகள் என்றவகையில் நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அசாத்சாலியை விட திமிர்பிடித்து இருந்தவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். பலமிக்க தலைமைத்துவம் நாட்டை ஆட்சி செய்கிறது. ஆகையால், எதிர்க்கட்சி உள்ளிட்ட அரசியல்வாதிகள் மிகவும் புத்திசாதுரியத்துடன் செயற்பட வேண்டும் என்றார். (ற-இ)

# சீரற்ற வானிலையால் 23,380 பேர் பாதிப்பு!!

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிப்பு!

கொழும்பு, ஜன.15



நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக, 23 ஆயிரத்து 380 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கிழக்கு மாகாணத்தில் 5 ஆயிரத்து 137 குடும்பங்களைச் சேர்ந்த, 16 ஆயிரத்து 453 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் 5 ஆயிரத்து 164 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 289 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 672 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 358 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 800 பேரும், யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 745 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில், கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. (ற-இ)

# கடற்படை பிரதானியாக சுமித் வீரசிங்க

கொழும்பு, ஜன.15

இலங்கை கடற்படையின் பிரதானியாக ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ந-இ)

# நகர பஸ் சேவைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன.15

கொழும்பில் பார்க் என்ட் ரைட் - நகர பஸ் சேவைகள் மாகும்புர மத்திய போக்குவரத்து நிலையத்திலிருந்து இன்று தொடக்கம் ஆரம்பமாகியுள்ளன. தனியார் வாகனங்களில் கொழும்புக்கு வரும் மக்கள் தங்கள் வாகனங்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி விட்டு, அங்கிருந்து இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான சொகுசு பஸ்களில் பயணிக்க முடியும்.

கொழும்பு நகரத்துக்குள் நுழையும் வாகனங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் பஸ் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-இ)

# போதைகளுடன் யாத்திரிகர் கைது



ஹற்றன், ஜன.15

நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருளுடன் சிவனொளிபாத மலை யாத்திரைக்காகச் சென்ற இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 10 மணியளவில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடிய இரண்டு இளைஞர்களை சோதனையிட்டபோதே குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் கல்கிஸ மற்றும் தெஹிவளை பகுதிகளைச் சேர்ந்த 27 மற்றும் 28 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள், போதைப்பொருள்களுடன் இன்று ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-இ)

தெற்காசியாவின் மிகப்பெரிய

# டயர் தொழிற்சாலை இலங்கையில் திறப்பு



கொழும்பு, ஜன.15

தெற்காசியாவின் மிகப்பெரிய டயர் தொழிற்சாலை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் ஹொரணையில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வகவத்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் 155 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலை அதிநவீன ஐரோப்பிய தொழில்நுட்பத்துடன் கூடிய அதிகமான உற்பத்திகள், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. சிறியரக கார்களில் இருந்து கனரக வாகனங்கள் வரையில் அனைத்து விதமான டயர்களும் இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இந்த தொழிற்சாலையின் முதற்கட்டத்துக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# இனப்பிரச்சினைக்கான தீர்வே மாகாண சபை முறைமை!!

## காஞ்சன ஜயரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜன.15

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர் ஒன்றியத்தின் தலைவர் காஞ்சன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபை தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்த பல்வேறு தரப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்தத் தேர்தலை இம்முறை மாத்திரம் பழையமுறையில் நடத்தி எதிர்காலத்தில் புதிய தேர்தல் முறையில் திருத்தங்களை மேற்கொண்டு புதிய தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்தல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்கள். மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து எதிர்வரும் வாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை முறைமையை வெள்ளை யானை என்று விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. மாகாண சபை முறைமையில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இதற்காக மாகாண சபை முறைமையை இரத்துச் செய்வது நியாயமற்றது - என்றார். (ற-இ)



# கொரோனா பாணியை நான் அருந்தவில்லை

### சூறுகிறார் இராஜாங்க அமைச்சர் தயாசிறி

கொழும்பு, ஜன.15

தேவிந்த லக்சிறி ரணசிங்க என்ற நபரால் தயாரிக்கப்பட்ட, கொரோனா ஒழிப்பு பாணியைத் தான் அருந்தவில்லை என, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில், ஹிக்கடுவ கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சைபெற்று வரும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி, தன்னையும் தனது குடும்ப உறுப்பினர்களையும் இந்தப் பாணியுடன் தொடர்புபடுத்த, அந்தப் பாணியைத் தயாரித்தவர் முயற்சிக்கிறார். எனினும், அதற்கு நான் இடமளிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் அந்தப் பாணி தனக்கு வழங்கப்பட்டது என அந்த நபரால் தெரிவிக்கப்படும் கருத்துகளையும் மறுத்துள்ளார். (ந-இ)

# வீரியமிக்க வைரஸ் தொற்றால் நாட்டுக்கு அச்சுறுத்தல் இல்லை

## டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.15

வீரியமிக்க கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில், நாட்டில் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். எனினும், அந்த தொற்றாளரால் இலங்கைக்கு உடனடியான அச்சுறுத்தல் இல்லை என்று பொதுச் சுகாதார சேவைகளின் துணைப் பணிப்பாளர் ஜெனரல் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும், புதிய வைரஸை கட்டுப்படுத்துவதற்கான அனைத்துவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அமைதியாக இருக்கவேண்டியது அவசியமாகின்றது. இங்கிலாந்தில் இருந்து வந்த நபர், புதிய வகை தொற்றுக்கு இலக்காகி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும்போதே, அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன. மரபணு வரிசைப்படுத்தலின் விளைவாகவே, அந்நபரின் புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. புதிய வைரஸ் சமூகத்துக்குள் நுழைவதைத் தடுக்க. நாட்டின் சுகாதார வழிகாட்டல்கள் இறுக்கமாக அமுல்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

# 3 இலட்சம் பெறுமதியான சிப்பிகள் மன்னாரில் மீட்பு

மன்னார், ஜன.15

மன்னார் பஸ் தரிப்பிடத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில், சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 977 சிப்பிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேகநபர் ஒருவரையும் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

மன்னார் விசேட அதிரடிப் படை பொலிஸ் முகாம் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே, அந்த வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் இன்றி, மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்தச் சிப்பிகளின் பெறுமதி, மூன்று இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட சிப்பிகளுடன் அவர், மன்னார் மீன்வள மற்றும் நீரியல்வள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தனர். (ந-இ)

### விதிகளை மீறும்

# சுற்றுலா நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் இரத்து

கொழும்பு, ஜன.15

சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை மீறும் சுற்றுலா ஒழுங்கமைப்பு நிறுவனங்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளிடமிருந்து நாட்டு மக்களுக்கும், நாட்டு மக்களிடமிருந்து சுற்றுலாப் பயணிகளுக்கும் தொற்று பரவாதிருக்கும் வகையிலேயே இத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாளொன்றுக்கு 2 ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 500 பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையை மீறி, சுற்றுலாப் பயணிகளை அழைத்து வர முடியாது. இதேவேளை, எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் அனைத்து விமான சேவைகளுக்காகவும் விமான நிலையம் மீளத் திறக்கப்படும். நாட்டின் சுகாதார கட்டுப்பாடுகளுக்கு அமைய, எல்லைகள் மூடப்பட்டுள்ள நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை தர முடியும் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ந-இ)

# முன்னாள் அமைச்சரின் மகன் கைதானார்

கொழும்பு, ஜன.15

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மீன்பிடித்துறையின் முன்னாள் அமைச்சருமான திலிப் வெதஆராச்சியின் மகன் மஹரகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினரின் மகன் செலுத்திய கார் மற்றுமொரு காருடன் மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது. இதையடுத்து இருதரப்புக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டு சில மணிநேரங்களில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. (வஇ)

# சிறை செல்லத் தயாராகுக!

கொழும்பு, ஜன.15

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறைச்சாலைக்குச் செல்லத் தயாராக வேண்டும் என சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார். இலங்கையில் தங்கியுள்ள ரோஹிங்கிய அகதிகளுக்கு எதிரான போராட்டத்துக்கு தலைமை தாங்கிய நிலையில், அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ற-இ)